


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 03 | Issue: 176 | 4 Pages | 24.01.2026 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 176 | 4 பக்கங்கள் | 24.01.2026 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்**

**பேதைமை எல்லாந் தரும்**

**விளக்கம்:** அறியவேண்டியவற்றை அறியாதிருப்பவரை அன்புடைமை காரணமாக நம்பித்தெளிதல், (தெளிந்தவர்க்கு)எல்லாஅறியாமையும் கெடும்.

## அமெரிக்காவின் பிடியில் இருந்து விலகத் துடிக்கும் மேற்குலக நாடுகள்?



வாஷிங்டன், ஜன.24

அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் பதவியேற்றதுமுதல் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். குறிப்பாக, பல்வேறு நாடுகள் மீது அதிரடியாக வரி விதித்து வருகிறார். மேலும், பல நாடுகள் மீது கூடுதல் வரி விதிப்பேன் என்று மிரட்டல் விடுத்து வருகிறார்.

அதேவேளை, அமெரிக்கா விதித்த வரியில் தளர்வை மேற்கொள்ள அந்தந்த நாடுகள் அமெரிக்காவிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. மேலும்,அமெரிக்காவுடன்வர்த்தகஒப்பந்தம்மேற்கொள்ளவும்முயற்சித்து வருகின்றன. இதனிடையே, டென்மார்க் நாட்டின் அங்கமாக உள்ள கிரீன்லாந்தை கைப்பற்ற டிரம்ப் திட்டமிட்டுள்ளார்.

கிரீன்லாந்தை அமெரிக்கா கைப்பற்றவில்லையென்றால் சீனா, ரஷியா கைப்பற்றிவிடும்எனஅவர்கூறிவருகிறார்.ஐரோப்பியநாடுகள்,அமெரிக்கா மற்றும் உலக அமைதிக்கு கிரீன்லாந்து தங்கள் வசம் இருப்பது முக்கியம் என்று டிரம்ப் கூறி வருகிறார். மேலும், இந்த நடவடிக்கைக்கு ஆதரவு அளிக்கவில்லையென்றால் கூடுதல் வரிவிதிப்பேன் என்று ஐரோப்பிய நாடுகளை டிரம்ப் மிரட்டி வருகிறார். டிரம்ப்பின் பேச்சுக்கு ஐரோப்பிய யூனியனில் இடம்பெற்றுள்ள நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், பிரான்ஸ், கனடா தலைவர்களை தொடர்ந்து ஜெர்மனி அதிபர் பிரெட்ரிக் மெர்ஸ், உலக பொருளாதார மன்றத்தில் அதிரடி முழக்கத்தை எழுப்பி உள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், “வல்லரசுகளின் அதிகாரப் போட்டி நிறைந்த புதியயுகத்திற்குள் நாம் நுழைந்துவிட்டோம். சீனா பெரும்சக்தியாக உருவெடுத்துள்ளது; அமெரிக்கா தனது கொள்கைகளை மாற்றி வருகிறது.

இனி மற்றவர்களைச் சார்ந்து இருப்பது நமக்கு ஆபத்து. ஐரோப்பா தன்னைத்தானே தற்காத்துக் கொள்ளும் சுயசார்பு நிலையை அடைய வேண்டும்.யதார்த்தத்தை ஏற்று புதிய பாதையை வகுப்போம். எந்த மிரட்டல்களுக்கும் ஐரோப்பா நிச்சயம் அடிபணியாது. அப்படி ஒரு சூழல் வந்தால், எங்களின் । பதிலடி மிகவும் உறுதியானதாக இருக்கும். எந்தச் சவாலையும் எதிர்கொள்ள நாங்கள் தயாராகிவிட்டோம்” என்று தெரிவித்துள்ளார். மேலும் அமெரிக்காவின் பிடியில் இருந்து மேற்குலக நாடுகள் விலகத் திட்டமிட்டுள்ளன.

## இரட்டை இலை சின்னம் குறித்த வழக்கு: டெல்லி ஐகோர்ட்டில் தேர்தல் ஆணையம் பதில் மனு தாக்கல்



புதுடெல்லி, ஜன.24

டெல்லி ஐகோர்ட்டில் புகழேந்தி சார்பில் வழக்குரைஞா் எஸ்.மனோஜ் செல்வராஜ், இந்தியத் தலைமைத் தோ்தல் ஆணையத்திற்கு எதிராக கோர்ட்டு அவமதிப்பு வழக்கை தாக்கல் செய்தார். அதில், “இரட்டை இலை சின்னம் விவகாரத்தில் டெல்லி ஐகோர்ட்டு கடந்த ஆண்டு மாா்ச் 24ஆம் தேதி பிறப்பித்த உத்தரவை தோ்தல் ஆணையம் உரிய வகையில் செயல்படுத்தவில்லை. இது தொடா்பாக கோர்ட்டை மனுதாரா் மீண்டும் நாடியபோது ஐகோர்ட்டு 17.12,2024இல் ஒரு உத்தரவு பிறப்பித்திருந்தது. அதன் பிறகு, மனுதாரா் தோ்தல் ஆணையத்தில் மனுக்களை அளித்த பிறகும், அவரது கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஐகோர்ட்டு உத்தரவு பிறப்பித்து 14 மாதங்கள் ஆகிவிட்டபிறகும் இந்த நிலை உள்ளது. இதனால், கோர்ட்டு உத்தரவை செயல்படுத்தாமல் இருப்பதற்காக எதிா்மனுதாரா்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்” என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிமுகவின் இரட்டை இலை சின்னம் தொடர்பாக விரைந்து பதில் அளிக்காததுஏன்? தேர்தல் ஆணையத்திற்கு டெல்லி ஐகோர்ட்டு கேள்வி எழுப்பி இருந்தது. அதுமட்டுமின்றி, அதிமுக முன்னாள் நிர்வாகி புகழேந்தியின் நீதிமன்ற கோர்ட்டு வழக்கில் பதில் அளிக்கவும் தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் டெல்லி ஐகோர்ட்டில் இந்த வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. தொடர்ந்து நடந்த விசாரணையின் போது, “அ.தி.மு.க.வின் சின்னம் ஒதுக்கீடு, பெயர் மற்றும் கொடி உள்ளிட்டவை தொடர்பாக பல்வேறு நபர்களிடம் இருந்து பெறப்பட்ட மனுக்கள் தீவிர பரிசீலனையில் உள்ளது” என்று தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# பாஜக கூட்டணிக்கு தமிழ்நாடு எப்போதுமே தோல்வியைத் தான் தரும் பிரதமருக்கு மு.க.ஸ்டாலின் பதிலடி

சென்னை, ஜன.24

மதுராந்தகத்தில் இன்று நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணியின் பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்துகொள்கிறார். இதையொட்டி, பிரதமர் மோடி தனது சமூக வலைதள பக்கத்தில், “திமுக ஆட்சியை வழியனுப்ப தமிழக மக்கள் தயாராகி விட்டனர்.” என்று தெரிவித்து இருந்தார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

தேர்தல் சீசன் வந்தால் மட்டும், தமிழ்நாடு பக்கம் அடிக்கடி வரும் மாண்புமிகு பிரதமர் மோடி அவர்களே... தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய 3,458 கோடி ரூபாய் கல்வி நிதி எப்போது வரும்?

தொகுதி மறுசீரமைப்பில்தமிழ்நாட்டின்தொகுதிகள் குறைக்கப்படாது என்ற உறுதிமொழி உங்கள் வாயில் இருந்து எப்போது வரும்?

பா.ஜ.க.வின் முகவர்போல் செயல்படும் ஆளுநரின் அராஜகம் எப்போது முடிவுக்கு வரும்?



தமிழ்ப்பாசத்தில் தமிழர்களை மிஞ்சியதாய்க் காட்டிக்கொள்ளும் உங்கள் அரசிடம் இருந்து தமிழுக்குரிய நிதி ஒதுக்கீடு எப்போது வரும்?

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் தொடரும், மாநிலங்கள் மீது நிதிச் சுமையை ஏற்றி ஊரக மக்களின் வாழ்வாதாரத்தை ஒழித்துக் கட்டும் விபிஜி ராம் ஜி கைவிடப்படும்" என வாக்குறுதி எப்போது வரும்?

பத்தாண்டுகளாக 'இன்ச் இன்ச்'சாக ஒன்றிய பா.ஜ.க. அரசு இழைத்து வரும் மதுரை எய்ம்ஸ் எனும் எட்டாவது உலக அதிசயம் எப்போது எங்கள் கண்முன் வரும்?

இயற்கைப் பேரிடர்களுக்காக நாங்கள் கேட்ட நிவாரணத் தொகை எப்போதுதான் வரும்?

ஓசூர் விமான நிலையம், கோவை & மதுரை மெட்ரோ திட்டங்களுக்கு எப்போது ஒப்புதல் வரும்?

கீழடி அறிக்கை எப்போது வெளியே வரும்?

ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களின் ஒருமனதான கோரிக்கையான நீட் விலக்கு எப்போது அமலுக்கு வரும்?

தொடர்ந்து துரோகங்களை மட்டுமே செய்யும் பா.ஜ.க. கூட்டணிக்குத் தமிழ்நாடு எப்போதுமே தோல்வியைத்தான் தரும்!”

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 78 வயது முதியவருக்கு உலகின் மிக அதிக சிக்கலான இதய பிரச்சனைக்கு தீர்வு வழங்கி ஆழ்வார்பேட்டை காவேரி மருத்துவமனை சாதனை

சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள காவேரி மருத்துவமனை, 78 வயதான ஒரு முதிய நோயாளிக்கு உலகின் மிக அரிதான மற்றும் சிக்கலான இதய சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்திருக்கிறது. ஏற்கனவே இரண்டு முறை மாற்றப்பட்ட இதய வால்வுக்குள், மீண்டும் ஒருமுறை வால்வு மாற்றும் இச்சிகிச்சை, அதிநவீன மருத்துவத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சிறப்பான பலனை தந்திருக்கிறது.

இந்த நோயாளிக்குத் தீவிரமான ‘அயார்டிக் ஸ்டெனோசிஸ்’ எனும் இதய வால்வு சுருக்கப் பிரச்சனை இருந்தது. இதற்காக 2005 ஆம் ஆண்டில் அவருக்குத் திறந்தநிலை இதய அறுவை சிகிச்சை (SAVR) செய்யப்பட்டு, ஒரு செயற்கை வால்வும் பொருத்தப்பட்டது.

இதுகுறித்து காவேரி மருத்துவமனைகள் குழுமத்தின் இணை நிறுவனரும், செயல் இயக்குநருமான டாக்டர் அரவிந்தன் செல்வராஜ் , டாக்டர் ராஜாராம் அனந்தராமன் ஆகியோர் கூறுகையில்

நோயாளியின் இதய அமைப்பு மற்றும் முந்தைய சிகிச்சைகளால் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக இது மிகவும் சவாலானதாக இருந்தது.மிகத்துல்லியமானதிட்டமிடல் மூலம் இந்தச் சிகிச்சை வெற்றிகரமாக முடிக்கப்பட்டது. நோயாளி மிக விரைவாகக் குணமடைந்து, சிகிச்சை முடிந்த மறுநாளே சாதாரண வார்டுக்கு மாற்றப்பட்டார். பின்னர் 48 மணி நேரத்தில் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார்,” .

ஆழ்வார்பேட்டை காவேரி மருத்துவமனையில் உள்ள உலகத்தரம் வாய்ந்த மருத்துவ நிபுணத்துவத்தை இந்த சிக்கலான இதய பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டிருக்கும் சாதனை எடுத்துக்காட்டுகிறது.

இத்தகைய உயிரிழப்பு ஏற்படும் ஆபத்துமிக்க மற்றும் சிக்கலான இதய சிகிச்சைகளை இங்கேயே வெற்றிகரமாக மேற்கொள்வதன் மூலம், நோயாளிகள் சிகிச்சைக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டிய அவசியம் இருக்காது,” என்று தெரிவித்தனர்.








# உலகின் முதல் ஃபார்முலா இ கருப்பொருளைக் கொண்ட சிறப்புப் பதிப்பு எஸ்யூவியான மஹிந்திரா BE 6 ஃபார்முலா இ எடிஷனை அறிமுகம்

உலகின் முதல் ஃபார்முலா இ கருப்பொருளைக் கொண்ட சிறப்புப் பதிப்பு எஸ்யூவியான மஹிந்திரா BE 6 ஃபார்முலா இ எடிஷனை அறிமுகப்படுத்துகிறது.



இந்தியாவின் மோட்டார்ஸ்போர்ட் தருணம் இறுதியாக வந்துவிட்டது, மேலும் பந்தயத்தை ஒரு விளையாட்டாக மட்டுமல்லாமல், ஒரு வாழ்க்கை முறையாகப் பார்க்கும் ஒரு நாட்டிற்காக உருவாக்கப்பட்ட BE 6 ஃபார்முலா இ எடிஷனை அறிமுகப்படுத்துவதன் மூலம் மஹிந்திரா இந்தியாவை முதன்மை இடத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

பந்தயம் என்பது புதிய தலைமுறையின் கலாச்சார மாற்றமாக மாறியுள்ளது. மேலும் இந்தியாவைப் பொறுத்தவரை, மஹிந்திராவை விட இந்த உலகின் ஒரு அங்கமாக உண்மையாக இருக்கும் வேறு எந்த பிராண்டும் இல்லை. மஹிந்திரா இந்தியாவின் ஆரம்ப கால மோட்டார்ஸ்போர்ட் முன்னோடியாக இருந்து வருகிறது பல தசாப்தங்களுக்கு முன்பு பேரணிப் பந்தயங்களில் ஆதிக்கம் செலுத்தியது முதல், உலகளாவிய ஃபார்முலா இ களத்தில் வெற்றி பெற்ற ஒரே இந்திய அணி என்ற பெருமையைப் பெற்றது வரை. அந்தப் பாரம்பரியத்திற்குத் தகுதியான ஒரு சாலை வாகனம் தேவை.

சென்னையில் மஹிந்திராவின் வலுவான மற்றும் வளர்ந்து வரும் இருப்பைக் கொண்டு, ஜூபிலன்ட் மோட்டார் வொர்க்ஸ் நிறுவனம் தனது வேலச்சேரி (முக்கிய கிளை), நந்தனம் மற்றும் நாவலூர் ஆகிய இடங்களில் உள்ள ஷோரூம்கள் மூலமாகவும், வேலச்சேரி, கீழ்க்கட்டளை மற்றும் கேளம்பாக்கத்தில் உள்ள நன்கு வசதியுடன் கூடிய சேவைப் பட்டறைகளின் ஆதரவுடனும் வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்வதில் உறுதியாக உள்ளது.

# செங்கோட்டை சிவன் கோவிலில் தைப்பூச திருவிழா கொடியேற்றம்

தென்காசி ஜன.24

செங்கோட்டையில் உள்ள தர்மஸம்வர்த்தினி அம்பாள் சமேத குலசேகர நாதசுவாமி கோவிலில் ஆண்டு தோறும் தைப்பூச திருவிழா கோலாகலமாக நடத்தபடுவது வழக்கம். அவ்வகையில் நடப்பாண்டு தைப்பூச திருவிழா இன்று தொடங்கியது. அதிகாலையில் கோவில் நடை திறக்கப்பட்டு சிறப்பு பூஜைகளுக்குப் பின்னர், 5.20 மணிக்கு மேல் 6.20 மணிக்குள் திருக்கொடியேற்றம் நடைபெற்றது. கொடியேற்ற விழாவில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.



இன்று மாலை 5.00 மணிக்கு ஆவாஹன ஸ்ரீபலி விழா தொடங்குகிறது. சுவாமி மற்றும் அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்கரத்துடன் தீபாராதனை காட்டப்பட்டு பக்கதர்களுக்கு அருள் பிரசாதங்கள் வழங்கப்படும். இரவு 9.00 மணிக்கு சுவாமி அம்பாள் ஏக சிம்மாசன வாகனத்தில் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்க உள்ளனர்.

இதேபோல் விழா நாட்களில் தினமும் சுவாமிஅம்பாள் வெவ்வேறு வாகனங்களில் எழுந்தருளி வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் 31ம் தேதி சனிக்கிழமை நடைபெறுகிறது. அன்றைய தினம் அதிகாலை 6.00 மணிக்கு மகா அபிஷேகம் நடக்கிறது. காலை 9.05 மணிக்கு மேல் தேர் வடம் பிடிக்கும் நிகழ்ச்சி நடக்கிறது. இதில் ஏராளமானோர் கலந்துகொண்டு வடம் பிடித்து தேர் இழுக்க உள்ளனர். மதியம் 2 தேர், 1 கோரதம் என 3 தேர்களும் நிலையம் வந்தடைய ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

தேரோட்டத்தைத் தொடர்ந்து பக்தர்களுக்கு அருள் பிரசாதம் மற்றும் சிறப்பு அன்னதானம் வழங்கப்பட உள்ளது. பிப்ரவரி 2ம் தேதி விழா நிறைவுபெறுகிறது.

# ம.நீ.ம. செயற்குழு கூட்டம் கமல்ஹாசன் அறிவிப்பு



சென்னை, ஜன.24

மக்கள் நீதி மய்யம் கட்சி சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;

மக்கள் நீதி மய்யம் கட்சியின் நிர்வாக குழு மற்றும் வெளக்குழு உறுப்பினர்களின் கூட்டம் நமது தலைவர், மாநிலங்களவை உறுப்பினர் கமல்ஹாசன் தலைமையில் வருகிற ஜனவரி 24ஆம் தேதி சனிக்கிழமை அன்று நடைபெற இருக்கிறது.

சென்னை ஆழ்வார் பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நாளை காலை 10.30 மணிக்கு தொடங்கும் இந்த கூட்டத்தில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் அனைத்து நிர்வாகிகளும், மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிறைவேற்றாத திட்டத்துக்கு நிதி எப்படி ஒதுக்குவார்கள்? முதல்அமைச்சரின் கேள்விகளுக்கு அண்ணாமலை பதிலடி

சென்னை, ஜன.24

பிரதம் மோடிக்கு கேள்விகள் கேட்டு, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டிருந்தார். இந்த நிலையில் அந்த பதிவுக்கு தமிழக முன்னாள் பாஜக தலைவர் அண்ணாமலை பதிலடி கொடுத்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:



திமுக கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளில், 10 சதவீதத்தை கூட முழுமையாக நிறைவேற்றாமல், நாளொரு நாடகம் நடத்திக் கொண்டு, நாட்டு நடப்பு என்னவென்றே தெரியாமல், யார் எதை எழுதிக் கொடுத்தாலும், அதை அப்படியே கிளிப்பிள்ளை போல ஒப்பிக்கும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே,

சமக்ரசிக்ஷாதிட்டத்தின் ஒரு அங்கமான பிஎம் ஶ்ரீ பள்ளிகளை தமிழகத்தில் கொண்டு வருவோம் என்று கடிதம் மூலமாக தெரிவித்துவிட்டு, பின்னர் அந்தர் பல்டி அடித்தது ஏன்? நிறைவேற்றாத திட்டத்துக்கு நிதி எப்படி ஒதுக்குவார்கள்?

DELIMITATIONல் தென் மாநிலங்களில் எந்த தொகுதியும் குறைக்கப்படாது என்று, மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா, கடந்த 2025ம் ஆண்டு பிப்ரவரி மாதமே தெரிவித்துவிட்டார். உங்களுக்கு செய்தித்தாள் வாசிக்கும் பழக்கம் இருக்க வாய்ப்பில்லை. உங்களுக்கு எழுதிக் கொடுப்பவர்களுக்குமா இல்லை?

தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு அதலபாதாளத்தில் இருக்கும்போது, கவர்னர் உங்களுக்குப் பாராட்டுப் பத்திரம் வாசிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா? உங்கள் நிர்வாகத் தோல்விக்கு கவர்னரை குற்றம் சொல்வதை எப்போது நிறுத்துவீர்கள்?

100 நாள் வேலை திட்டத்தை 150 நாட்களாக உயர்த்துவோம் என்று நீங்கள் தேர்தல் வாக்குறுதி கொடுத்து ஐந்து ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால், ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போடாமல் இருக்கிறீர்கள். மத்திய அரசு தற்போது அதனை 125 நாட்களாக உயர்த்தி இருக்கிறது. இனிமேலும் அத்திட்டத்தில் உங்கள் கட்சியினரால் ஊழல் செய்ய முடியாது என்ற இயலாமை, உங்களை இப்படி புலம்ப வைத்திருக்கிறது.

எய்ம்ஸ் கட்டுமானம் வேகமாக நடந்து கொண்டிருக்கிறது. வேங்கைவயலுக்குதான் நீங்கள் போகவில்லை. மதுரைக்குச் சென்று பார்த்திருக்கலாமே? உங்களை யார் தடுத்தார்கள்? நீங்கள் விரும்பவில்லை என்றாலும், இந்த வருடம் மதுரை எய்ம்ஸ், மக்கள் பயன்பாட்டிற்கு வரும். மதுரையில் வேளாண் பல்கலைக் கழகம் அமைப்போம் என்று நீங்கள் கொடுத்த வாக்குறுதி நினைவில் இருக்கா? குறைந்தபட்சம் ஒரு செங்கல்லாவது வைத்தீர்களா?

இயற்கை பேரிடர்களுக்கான நிதியை மத்திய அரசு விடுவித்துவிட்டது. 5,000 கோடி ரூபாய் செலவு செய்தும், வருடந்தோறும் சென்னையை வெள்ளக்காடாக மாற்றுவதே உங்கள் சாதனை.

கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு வேண்டுமென்றே உங்கள் அரசு தவறான DPRஐ வழங்கியது உங்களுக்கு நினைவில் இருக்கிறதா? திருத்தம் செய்யப்பட்ட DPRஐ மீண்டும் சமர்ப்பிக்க எண்ணம் இருக்கிறதா இல்லையா?

கீழடி ஆய்வறிக்கை, உலகளாவிய அளவில் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதால், மேலும் அறிவியல்பூர்வமான ஆதாரங்கள் வேண்டும் என்று கேட்கிறது மத்திய அரசு. அந்த ஆதாரங்களைக் கொடுக்க என்ன தயக்கம் உங்கள் அரசுக்கு?

நீட் தேர்வை, தமிழக மக்கள் எதிர்க்கவில்லை. ஏழை, எளிய மாணவர்களுக்கு, நீட் ஒரு வரப்பிரசாதம் என்பதை, ஆண்டுதோறும் மருத்துவக் கல்லூரிகளில் இணையும் எளிய பின்புலம் கொண்ட பெற்றோர்கள் கூறுவார்கள். மருத்துவக் கல்வி இடங்களை விற்று, இத்தனை ஆண்டு காலம் பல கோடி சம்பாதித்த திமுக கும்பலுக்கு மட்டுமே நீட் தேர்வு கசக்கிறது.

ஒரு காலத்தில், தங்களுக்குப் பிடிக்காதவர்கள் குறித்து, பொதுக்கழிவறைகளில் கரித்துண்டால் எழுதி அற்ப சந்தோஷப்படும் மோசமான பழக்கத்தை, ஏ.ஐ. காலத்திலும் தொடராதீர்கள் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே. இனியாவது மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# கன்னியாகுமரியில் சுற்றுலா பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் அமைச்சர் சிவசங்கர் பேச்சு

சென்னை ஜன.24

தமிழக சட்டசபையின் 4ம் நாள் கூட்டத்தொடர் தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் சட்டசபை கேள்வி நேரத்தின்போது, குளச்சல் தொகுதி காங்கிரஸ் எம்.எல்.ஏ. பிரின்ஸ், கன்னியாகுமரியில் சுற்றுலா பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த அமைச்சர் சிவசங்கர், கும்பகோணத்தில் நவகிரக சுற்றுலா பேருந்து மற்றும் சென்னையில் 'சென்னை உலா' சுற்றுலா பேருந்து வசதி ஆகியவை தொடங்கப்பட்டுள்ளது.

இது போன்று கன்னியாகுமரியில் சுற்றுலா பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் அளித்தார்.

# காதல் விவகாரம்: வகுப்பறையில் கல்லூரி மாணவிக்கு கத்திக்குத்து காதலன் கைது

கோயம்புத்தூர் ஜன.24

கோவை சரவணம்பட்டியில் உள்ள ஒரு தனியார் தொழில்நுட்ப கல்லூரியில் 17 வயது மாணவி பி.டெக். ஐ.டி. முதலாம் ஆண்டு படித்து வருகிறார். அதே கல்லூரியில் படித்து வரும் 18 வயது மாணவரும், அந்த மாணவியும் நட்பாக பழகினர். பின்னர் அது காதலாக மாறியது. அவர்கள் இருவரும் 3 மாதமாக காதலித்து வந்தனர்.

இதற்கிடையே அதே கல்லூரியில் படித்து வரும் மற்றொரு மாணவர், அந்த மாணவியை சந்தித்து, காதலிப்பதாக கூறியுள்ளார். அதற்கு அந்த மாணவி, தான் வேறு ஒருவரை காதலிப்பதாக கூறியதாக தெரிகிறது. ஆனாலும் தன்னை காதலிப்பதாக கூறிய அந்த மாணவரிடம், நட்புரீதியில் மாணவி பேசி வந்துள்ளார்.

இது அந்த மாணவியின் காதலனுக்கு தெரிய வந்தது. உடனே, அவர் தனது காதலியை சந்தித்து இனி மேல் நீ அவனுடன் பேசக்கூடாது என்று கண்டித்துள்ளார். ஆனாலும் அவருடன், மாணவி பேசி வந்துள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்த மாணவர், தனது காதலியிடம் சென்று ஏன் நீ அவனிடம் பேசுகிறாய் என்று கேட்டுள்ளார். அதற்கு மாணவி, நட்பு முறையில் பேசுவதாக கூறியுள்ளார். இதனால் அவர்கள் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த நிலையில் நேற்று காலை வகுப்பறையில் அந்த மாணவருடன், மாணவி பேசிக்கொண்டு இருந்தார். அதை பார்த்த காதலன், தனது காதலியை கண்டித்துள்ளார். இதனால் அவர்கள் இடையே தகராறு ஏற்பட்டது. இதில் ஆத்திரம் அடைந்த காதலன், தனது பையில் இருந்த காய்கறி வெட்டும் கத்தியை எடுத்து மாணவியின் கன்னம் மற்றும் கையில் குத்திவிட்டு, தப்பி ஓடினார்.

இதில் காயமடைந்த மாணவியை சக மாணவ, மாணவிகள் மீட்டு சரவணம்பட்டியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர். பின்னர் அவரை மேல் சிகிச்சைக்காக கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இது குறித்து சரவணம்பட்டி போலீசார் வழக்குப் பதிவு செய்து தப்பி ஓடிய காதலனை கைது செய்தனர். காதல் விவகாரத்தில் கல்லூரி வகுப்பறைக்குள் மாணவியை, காதலன் கத்தியால் குத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தை முடிவதற்குள் உரிய பதில் ஓ.பன்னீர்செல்வம் பேட்டி

தேனி, ஜன.24

தமிழகத்தில் சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம் நடைபெற வாய்ப்பு உள்ளது. தேர்தலுக்கு இன்னும் ஓரிரு மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன.

அதிமுக, பாஜக இணைந்து தேசிய ஜனநாயக கூட்டணியை அமைத்துள்ளது. இந்த கூட்டணியில் பாமக (அன்புமணி தரப்பு), அமமுக, தமிழ் மாநில காங்கிரஸ், இந்திய ஜனநாயக கட்சி, புதிய நீதிக்கட்சி, தமிழக மக்கள் முன்னேற்ற கழகம், புரட்சி பாரதம் உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ளன.

இந்த சூழலில் செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் இன்று நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணியின் பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்று பேசுகிறார்.

இதற்கிடையே சட்டசபை தேர்தலில் பாஜகவிடம் இருந்து கூட்டணி அழைப்பு வரும் என்று ஓ.பன்னீர்செல்வம் நம்பிக்கொண்டிருந்தார். ஆனால் அவருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அதற்கு, அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தடையாக இருப்பதாக கூறப்படுகிறது.



ஏற்கனவே, கூட்டணி குறித்து ஓ.பன்னீர்செல்வத்திடம் பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பிய போது எல்லாம், தைப்பிறந்தால் வழி பிறக்கும் என்று சொல்லி வந்தார். இந்த நிலையில் இன்று தேனியில் அவரிடம் செய்தியாளர்கள் கூட்டணி குறித்து மீண்டும் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த ஓ.பன்னீர்செல்வம் கூறியதாவது:

சென்னை செல்கிறேன். இன்னும் 2 நாட்களில் சென்னையில் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற உள்ளது. தை முடிவதற்கு இன்னும் நாட்கள் உள்ளன. தை முடிவதற்குள் உரிய பதில் அளிக்கப்படும். அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து மாவட்ட செயலாளர்கள் கூட்டத்திற்கு பிறகு முடிவு எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# அ.ம.மு.க. துணைப்பொதுச்செயலாளர் கட்சியில் இருந்து நீக்கம்: தி.மு.க.வில் இணைகிறாரா..?

சென்னை, ஜன.24

அ.ம.மு.க. துணைப் பொதுச்செயலாளர் மாணிக்க ராஜா, கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் தலைவர் டி.டி.வி. தினகரன் அறிவித்துள்ளார்.



இதுதொடர்பாக அ.ம.மு.க. தலைமை கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

கழகத்தின் கொள்கை குறிக்கோள்களுக்கும், கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயல்பட்டதாலும், கழகத்தின் கண்ணியத்திற்கு களங்கம் ஏற்படும்வகையில்நடந்து கொண்டதாலும், கழகக் கட்டுப்பாட்டை மீறி கழகத்திற்கு களங்கமும் அவப்பெயரும் உண்டாகும் விதத்தில் செயல்பட்ட காரணத்தினாலும், கழக துணைப் பொதுச்செயலாளர் எஸ்.வி.எஸ்.பி. மாணிக்கராஜா அவர்கள் கழகத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் இன்று முதல் நீக்கி வைக்கப்படுகிறார். கழக உடன்பிறப்புகள் யாரும் இவருடன் எவ்விதத் தொடர்பம் வைத்துக்கொள்ளக்கூடாது எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தி.மு.க.வில் இணைகிறாரா..?

இந்நிலையில் பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமமுக துணைப் பொதுச் செயலாளர் எஸ்.வி.எஸ்.பி. மாணிக்கராஜா தி.மு.க.வில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

மேலும் தென்மாவட்டங்களைச் சேர்ந்த சில மாவட்டச் செயலாளர்களும் தி.மு.க.வில் இணைவார்கள் என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜம்மு காஷ்மீரில் வாகன விபத்தில் உயிரிழந்த ராணுவ வீரர்களுக்கு சட்டசபையில் இரங்கல் தீர்மானம்

சென்னை ஜன.24

தமிழக சட்டசபையின் 4ம் நாள் கூட்டத்தொடர் தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் ஜம்மு காஷ்மீரில் வாகன விபத்தில் உயிரிழந்த ராணுவ வீரர்களுக்கு தமிழக சட்டசபையில் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இரங்கல் தீர்மானத்தை வாசித்த பேரவைத் தலைவர் அப்பாவு, "ஜம்மு காஷ்மீரில் ராணுவ வீரர்கள் பயணித்த வாகனம் விபத்துக்குள்ளாகி வீரர்கள் உயிரிழந்த சம்பவத்தை கேட்டு இப்பேரவை அதிர்ச்சியும் வேதனையும் அடைகிறது.



நம் நாட்டின் துணிச்சல் மிக்க வீரர்களை இழந்துள்ள நிலையில், அவர்கள் அனைவரும் ஆற்றிய சேவையை நாம் என்றென்றும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த நிகழ்வில் உயிரிழந்த ராணுவ வீரர்களின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்வதோடு, காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ராணுவ வீரர்கள் விரைவில் குணமடையவும் இப்பேரவை விழைகிறது" என்று கூறினார்.

# திருவண்ணாமலையில் விமான நிலையம் அமையுமா..? அமைச்சர் சிவசங்கர் பதில்



சென்னை, ஜன.24

தமிழக சட்டசபையில் கேள்வி நேரத்தில் பேசிய துணை பேரவைத் தலைவர் பிச்சாண்டி, கீழ் பொண்ணாத்தூர் தொகுதியில் ஒரு போக்குவரத்து பணிமணை அமைக்க வேண்டும் என்றும், திருவண்ணாமலைக்கு அதிக பக்தர்கள் வருவதால், உதான் திட்டத்தின் கீழ் ஒரு விமான நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதில் அளித்த அமைச்சர் சிவசங்கர், “நிதி ஆதாரத்தை சட்ட மன்ற உறுப்பினர் ஏற்பாடு செய்தால் பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். விமான நிலைத்தை பொறுத்த வரையில் புரியாத புதிராக உள்ளது. அவருடன் பேசி நடவடிக்கை எடுக்கப்படும்” என்று பதில் அளித்தார்.

# நெல்லையப்பர் கோவிலில் தைப்பூச திருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்



நெல்லை, ஜன.24

நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் கோவிலில் ஆண்டுதோறும் தைப்பூச திருவிழா வெகுவிமரிசையாக நடைபெறும். இந்த ஆண்டு தைப்பூசதிருவிழா இன்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை 5 மணி அளவில் கொடியேற்றத்துடன் தொடங்கியது. சுவாமி சன்னதியில் உள்ள பிள்ளையார் கொடிமரத்தில் கொடியேற்றப்பட்டது. அதைத்தொடர்ந்து தினமும் சுவாமி, அம்பாளுக்கு சிறப்பு அபிஷேக, பூஜைகள் நடைபெறுகிறது.

வரும் 26ந்தேதி (திங்கட்கிழமை) காலை 11 மணிக்கு சுவாமி சன்னதியில் 'நெல்லுக்கு வேலியிட்ட திருவிளையாடல்' நிகழ்ச்சி நடைபெறுகிறது. மாலை 6 மணிக்கு பஞ்ச மூர்த்திகள் அபிஷேகம், அலங்காரம், தீபாராதனையும், பின்னர் பஞ்ச மூர்த்திகள் வீதிஉலாவும் நடைபெறுகிறது. இதனைத்தொடர்ந்து பிப்ரவரி மாதம் 1ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாலையில் நெல்லை சந்திப்பு கைலாசபுரம் தைப்பூச மண்டபத்தில் எழுந்தருளும் சுவாமி, அம்பாளுக்கு சிறப்பு பூஜையும், அதை தொடர்ந்து தாமிரபரணி ஆற்றில் தீர்த்தவாரி நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

2ந்தேதி காலை 10 மணிக்கு கீழரதவீதி சவுந்தரசபை மண்டபத்தில் நடராஜர் திருநடன காட்சியும், பின்னர் சந்திவிநாயகர் கோவில் அருகே திருக்காட்சி வைபவமும் நடைபெறுகிறது. 3ந்தேதி (செவ்வாய்க்கிழமை) இரவு 7 மணிக்கு சொக்கப்பனைமுக்கு அருகே உள்ள சந்திர புஷ்கரணி எனப்படும் வெளி தெப்பக்குளத்தில் தெப்ப உற்சவம் நடைபெறுகிறது.

# திருச்செந்தூரில் திடீரென உள்வாங்கிய கடல்



திருச்செந்தூர், ஜன.24

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் வருகின்றனர். இங்குள்ள கடலில் புனித நீராடிவிட்டு சாமி தரிசனம் செய்வதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

ஒவ்வொரு மாதமும் வழக்கமாக அமாவாசை, பவுர்ணமி நாட்கள் மற்றும் அதற்கு முன்தினம், மறுதினங்களில் காலையில் கடல் உள்வாங்குவதும், மாலையில் இயல்பு நிலைக்கு திரும்புவதும் வழக்கமாக நடைபெற்று வருகிறது.

கடந்த 18ந்தேதி அமாவாசை இருந்தது. இதையொட்டி நேற்று திருச்செந்தூர் கோவில் முன்புறம் உள்ள படிக்கட்டு முகப்பு பகுதியில் 2வது முறையாக கடல் சுமார் 60 அடி தூரம் உள்வாங்கி காணப்பட்டது.

ஏற்கனவே கடல் அரிப்பு ஏற்பட்ட இடத்தில் கடல் உள்வாங்கியதால் பாசி படர்ந்த பாறைகள் வெளியே தெரிந்தன. இருந்தபோதிலும் கோவிலுக்கு வந்த பக்தர்கள் எந்தவித அச்சமும் இன்றி கடலில் புனித நீராடினர். மாலையில் கடல் இயல்பு நிலைக்கு திரும்பியது. கடந்த 4ந்தேதி பவுர்ணமியையொட்டி இதே முகப்பு பகுதியில் சுமார் 50 அடி தூரம் கடல் உள்வாங்கியது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக சுப்பிரமணிய சுவாமி கோவில், அய்யாவைகுண்டர் அவதார பதிக்கு இடைப்பட்ட கடற்பகுதியில்தான் கடல் உள்வாங்குவதும், பின்னர் இயல்பு நிலைக்கு திரும்புவதும் வழக்கம். ஆனால் வழக்கத்துக்கு மாறான இடத்தில் கடல் உள்வாங்கியதால் அப்பகுதியில் சிறிது பரபரப்பு ஏற்பட்டது. கடந்த சுமார் 2 மாத காலங்களாக கோவில் முன்புள்ள கடற்கரைக்கு இறங்கும் படிக்கட்டு பகுதியில் இருந்து சுமார் 200 அடி நீளத்திற்கும், 4 அடி ஆழத்திற்கும் கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் கோவில் நிர்வாகம் சார்பில் கடற்கரைக்கு இறங்கும் படிக்கட்டு பகுதியில் இருந்து சுமார் 200 அடி நீளத்திற்கு கம்புகள் மற்றும் இரும்பு தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது.

# கேரளாவில் போலீஸ் வாகனம் மீது ஜீப் கொண்டு மோதிய நபர் தென்காசியில் கைது



தென்காசி ஜன. 24

கேரளா மாநிலம் கொல்லம் மாவட்டம் படலூர் கிராமத்தில் கடந்த 19ம் தேதி கோவில் கொடை விழா நடைபெற்றது. கோவில் கொடைவிழாவில் சில விளையாட்டு போட்டிகளும் நடைபெற்றன. அந்த போட்டிகளில் பங்கேற்க அதே கிராமத்தை சேர்ந்த தேவன் என்பவர் தனது செல்லப்பிராணி நாயை அழைத்து வந்துள்ளார்.

அப்போது, தேவனுக்கு கோவில் நிர்வாகிகளுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அங்கு பாதுகாப்புப்பணியில் இருந்த போலீசார் தேவனை வீட்டிற்கு செல்லுமாறு கூறினர். இதனால் ஆத்திரமடைந்த அவர் கோவில் அருகே நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களுக்கு தீ வைப்பேன் என மிரட்டினார்.

இதையடுத்து, போலீசாரிடம் அவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பின்னர், தனது ஜீப்பை கொண்டு போலீசார் வாகனம் மீது 3 முறை மோதினார். இதில் வாகனத்தில் இருந்த 3 போலீசார் காயமடைந்தனர். போலீஸ் வாகனத்தின் மீது ஜீப்பால் மோதியப்பின் அங்கிருந்து தேவன் தப்பிச்சென்றுவிட்டார்.

தலைமறைவான தேவனை தேடிய போலீசார், அவர் தமிழகத்தின் தென்காசி மாவட்டத்தில் பதுங்கி இருந்ததை கண்டறிந்தனர். இதையடுத்து நேற்று தென்காசிக்கு விரைந்து சென்ற கேரளபோலீசார் தேவனை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட தேவனை கேரளாவுக்கு அழைத்து சென்ற போலீசார், அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி பின்னர் சிறையில் அடைத்தனர்.

# புதுப்பிக்கப்பட்டுள்ள தொல்காப்பியப் பூங்காவில் நடைப்பயிற்சி கட்டணம் குறைப்பு




சென்னை, ஜன.24

தொல்காப்பிய பூங்கா தொடர்பாக வெளியான செய்திக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறை சார்பில் அளிக்கப்படும் விளக்கம் பின்வருமாறு:

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் மூலம் புதுப்பிக்கப்பட்டுள்ள தொல்காப்பிய பூங்கா 24.10.2025 அன்று பொது மக்கள் பயன்பாட்டிற்கு மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ளது. சென்னை ஐகோர்ட்டின் வழிகாட்டுதல்படி அமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவின் பரிந்துரைகள்படி, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பொருட்டு குறிப்பிட்ட அளவிலான பார்வையாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

அதனால் தற்போது ஓர் அமர்விற்கு 250 பேர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள். தொல்காப்பியப் பூங்காவில் பொதுமக்கள் நடைப்பயிற்சிக்காக காலை 6.30 மணி முதல் 8.00 மணி வரையும், மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரையும் 365 நாள்களும் அனுமதிக்கப்படுகிறார்கள். மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் கல்விக்காக கல்வி நிறுவனங்கள் மூலம் மாணவ, மாணவியர் திங்கள்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை (வியாழக்கிழமை மற்றும் பொது விடுமுறை நாள்கள் நீங்கலாக) காலை 9:30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை அனுமதிக்கப்படுகிறார்கள்.

பொதுமக்களுக்கான வழிகாட்டப்பட்ட சுற்றுப்பயணம் திங்கள்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை (வியாழக்கிழமை மற்றும் பொது விடுமுறை நாள்கள் தவிர) பிற்பகல் 2.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை அனுமதிக்கப்படுகிறது. சீரமைப்பிற்குப் பிறகு நடைப்பயிற்சிக்காக அனுமதி பெற்றவர்கள் நீங்கலாக 24.10.2025 முதல் இன்றுவரை 6,843 மாணவ, மாணவியரும் 20,233 பொதுமக்களும் பூங்காவைப் பார்வையிட்டு மகிழ்ந்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு, மேற்கொண்ட இச்சுற்றுச்சூழல் சீரமைப்பின் விளைவாக அடையாறு சிற்றோடை மற்றும் முகத்துவாரப் பகுதிகளில் அண்மையில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, 549 வகையான உயிரினங்கள் இப்பூங்காவில் உள்ளன. சீரமைப்பிற்கு முன்பு 2011 ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 141 ஆக மட்டுமே இருந்தது. தற்போது, தொல்காப்பியப் பூங்கா நகர்ப்புர ஈரநில உயிரிப் பல்வகைமையின் வாழ்விடமாகத் திகழ்கிறது.

சீரமைப்பிற்கு முன்பு பூங்காவில் நடைப்பயிற்சிக்கு 1.95 கி.மீ. தூரம் இருந்தது. தற்போது சீரமைப்புக்குப் பின் கூடுதலாக 1.25 கி.மீ வசதி ஏற்படுத்தப்பட்டு, மொத்தம் 3.20 கி.மீ நடைப்பயிற்சிக்குதற்போது காலை மற்றும் மாலை இருவேளைகளில் அனுமதிக்கப்படும் பொதுமக்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்ட அளவை எட்டி உள்ளதால், புதியவர்களுக்கு அனுமதி வழங்க இயலாத நிலை உள்ளது. ஆனால் 2.30 மணி முதல் 4.30 மணி வரை அனைத்துத் தரப்பினருக்கும் இப்போதும் அனுமதி வழங்கப்படுகிறது.

இந்த அனுமதி பெறுவதற்கு பொதுமக்களுக்குத் தடையேதுமில்லை. எனினும் நடைப்பயிற்சி மேற்கொள்ளுவதற்காக, கோரிக்கைகள் அதிகமாக உள்ளதால் கூடுதல் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தற்போது 500 என்ற எண்ணிக்கையில் உள்ள நடைப்பயிற்சி அனுமதியை 1.2.2026 முதல் 3,000 என்ற எண்ணிக்கையில் உயர்த்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நடைப்பயிற்சி அடையாள அட்டை மூன்று வண்ணங்களில் வழங்கப்படும். ஒவ்வொரு வண்ண அடையாள அட்டை பெற்ற பயனாளிகளும்

வாரத்தில் மூன்றுமுறை வந்து நடைப்பயிற்சி மேற்கொள்ளலாம். அதற்கான நடைப்பயிற்சி அடையாள அட்டை பெறுவதற்கான திருத்திய கட்டணமாக ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.500/ என்று இருப்பது தற்போது ரூ.250/ ஆகவும், 3 மாதங்களுக்கு ரூ.1,500/ என்று இருப்பது ரூ.750/ ஆகவும், 6 மாதங்களுக்கு ரூ.2,500/ என்று இருப்பது ரூ.1,250/ ஆகவும், 12 மாதங்களுக்கு ரூ.5,000/ என்று இருப்பது ரூ.2,500/ ஆகவும் குறைத்து நிர்ணயிக்கப்படும்.

ஒவ்வொரு அமர்விலும் 300 பார்வையாளர்கள் மட்டுமே பூங்காவினுள் இருக்கும் வகையில் முறைப்படுத்தப்படுவார்கள். மேலும், நுழைவுசீட்டு முன்பதிவு மற்றும் பிற விவரங்களை www.crrt.tn.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# "பா.ஜ.க. அ.தி.மு.க. கூட்டணியில் த.வெ.க. இணையுமா..? செங்கோட்டையன் பதில்



சென்னை, ஜன.24

த.வெ.க. நிர்வாக குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் சென்னையில் செய்தியாளர்களிடம் கூறுகையில், "தி.மு.க.வில் நான் சேரப் போவதாக பரவிய தகவல்களில் உண்மை இல்லை. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா எதிர்த்த தி.மு.க.வில் சேர்வது என்பது ஒருபோதும் நடக்காது. எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவை போன்று ஒரு நல்ல தலைவராக விஜய் இருக்கிறார். அதனால்தான் த.வெ.க. எனக்கு சிறந்த தேர்வாக இருந்தது.

விஜய்க்கு 34 சதவீத வாக்குகள் இருக்கிறது. த.வெ.க.வை தி.மு.க.வின் 'பி' டீம் என்று சொல்வதில் அர்த்தமில்லை. ஈரோடு மக்கள் சந்திப்பில் தி.மு.க.வை தீய சக்தி என்று விஜய் பிரகடனப்படுத்தி இருக்கிறார். விஜய் கொள்கை பற்றி கேட்கிறவர்களுக்கு, காஞ்சீபுரத்தில் விஜய் அறிவித்த திட்டங்களே பதில் சொல்லும். எனது அரசியல் பயணம் குறித்து கூற வேண்டுமானால் கூவத்தூர் நிகழ்வின்போது சசிகலா என்னை தனிப்பட்ட முறையில் அழைத்து முதல்அமைச்சர்பதவியை ஏற்க சொன்னார். ஆனால் அதை மறுத்து விட்டேன். அ.தி.மு.க.வை ஒன்றிணைக்கவே முன்பு பா.ஜனதாவிடம் பேசினேன். ஆனால் என் முயற்சி தோல்வி அடைந்துவிட்டது.

நான்தான் எடப்பாடி பழனிசாமியை ஜெயலலிதாவுக்கு அறிமுகப்படுத்தினேன். நான் வளர்த்த ஒருவரே என்னை நீக்கியதை நினைத்து 2 நாட்கள் தூங்காமல் அழுதேன். நான் எந்த தவறும் செய்யவில்லை. காங்கிரஸ் இரண்டு முகமாக பிரிந்துள்ளது. அவர்கள் எந்த வழியில் செல்வார்கள் என்பதை கணிப்பது கடினமாக இருக்கிறது. ஒரு பிரிவினர் எங்களுடன் கூட்டணி வைக்க விரும்புகிறார்கள். எங்களுடன் பேசிவருகிறார்கள்" என்று அவர் கூறினார்.

திருப்பரங்குன்றம் விவகாரம், 100 நாள் வேலை சட்டத்திருத்தம் உள்ளிட்டவற்றுக்கு கருத்து கூறாததால் பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைக்க விஜய் திட்டமிட்டுள்ளாரா என்ற கேள்விக்கு, த.வெ.க.வின் கொள்கை எதிரி பா.ஜ.க. என்பதில் விஜய் தெளிவாக இருப்பதாக செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. அ.தி.மு.க. கூட்டணியில் த.வெ.க. இணையாது என்பதை உறுதிப்படுத்த முடியுமா என்ற கேள்விக்கு, அது தலைவர்களின் மனநிலையைப் பொறுத்தது என்று செங்கோட்டையன் தெரிவித்தார்.

# ஊரக வேலைவாய்ப்பு திட்டம் தொடர்பாக சட்டசபையில் சிறப்பு தீர்மானம்



சென்னை ஜன.24

கிராமப்புற வேலை வாய்ப்புக்காக கடந்த 2005ம் ஆண்டு, 'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டம்' (MGNREGA) கொண்டு வரப்பட்டது. அதில், தகுதியுள்ள ஒவ்வொரு கிராமப்புற குடும்பத்துக்கும் ஒரு நிதியாண்டில் 100 நாட்கள் வேலை அளிக்கப்படுகிறது. இது 100 நாள் வேலைத்திட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.

இதற்கிடையே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தை மாற்ற வகை செய்யும், வளர்ந்த பாரத ஊரக வேலை வாய்ப்பு மற்றும் வாழ்வாதார உறுதியளிப்பு சட்ட மசோதாவை (VBG RAM G) மத்திய மந்திரி சிவராஜ் சிங் மக்களவையில் கடந்த டிசம்பரில் அறிமுகம் செய்தார். நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மசோதா நிறைவேற்றப்பட்ட நிலையில் ஜனாதிபதி திரவுபதி முர்மு அதற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

புதிய மசோதாவின்படி, ஓராண்டில் 100 நாள் வேலைவாய்ப்பு என்பது 125 நாள்களாக உயர்த்தப்பட உள்ளது. ஆனால், 100 சதவீதம் மத்திய அரசு நிதியளித்து வந்த இத்திட்டத்துக்கு இனி மாநில அரசுகள் 40 சதவீதம் நிதியளிக்கும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இந்த மசோதா மாநில அரசுகள்மீது நிதிசுமையை ஏற்றும் வகையில் இருப்பதாகவும், மகாத்மா காந்தி பெயரை நீக்குவதற்கும் எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில் ஊரக வேலைவாய்ப்பு திட்டம் தொடர்பாக இன்று சட்டசபையில் சிறப்பு தீர்மானம் கொண்டு வரப்படும் என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். நேற்று சட்டசபையில் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக நடந்த விவாதத்தின்போது, "100 நாள் வேலைவாய்ப்பு திட்டம், 150 நாட்களாக உயர்த்தப்படும் என்று திமுக தேர்தல் அறிக்கையில் அறிவித்தோம். அதை மறுக்கவில்லை. இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்திருந்தால் அதனை நிச்சயமாக நிறைவேற்றி இருப்போம்.

மத்தியில் பாஜக தான் ஆட்சியில் இருக்கிறது. நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி தான் வருகிறோம். இது தொடர்பாக சட்டசபையில் நாளை (இன்று) தீர்மானம் கொண்டுவர உள்ளோம்" என்று முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

# மூதாட்டி முகத்தில் மிளகாய் பொடி தூவி 2 பவுன் செயின் பறிப்பு

திருச்சி, ஜன.24

திருச்சி மாவட்டம் லால்குடியை அடுத்த காட்டூர் ராமநாதபுரம் மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்த வேலு உடையாரின் மனைவி சின்னபொன்னு (வயது 85). இவர் நேற்று தனது வீட்டில் நாற்காலியில் அமர்ந்திருந்தார். அப்போது அங்கு வந்த ஒருவர், திடீரென சின்ன பொன்னுவின் முகத்தில் மிளகாய் பொடியை தூவினார்.

மேலும் அவருடைய கழுத்தில் இருந்த 2 பவுன் தங்கச் சங்கிலியை, அந்தநபர் பறித்துசென்றதாக கூறப்படுகிறது. இதுகுறித்த புகாரின்பேரில் லால்குடி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# குடியரசு தினம், தொடர் விடுமுறை: சென்னையில் இருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கம்




சென்னை, ஜன.24

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மேலாண் இயக்குநர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

23/01/2026 (வெள்ளிக்கிழமை) 24/01/2026 (சனிக் கிழமை), 25/01/2026 (ஞாயிறு) வார விடுமுறை மற்றும் 26/01/2026 (குடியரசுதினம்) ஆகிய நாட்களில் தொடர் விடுமுறையை முன்னிட்டு சென்னையிலிருந்தும் இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 23/01/2026 (வெள்ளிக்கிழமை) அன்று 550 பேருந்துகளும், 24/01/2026 (சனிக்கிழமை) 405 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 23/01/2026 வெள்ளிக்கிழமை அன்று 100 பேருந்துகளும் 24/01/2026 சனிக்கிழமை அன்று 90 பேருந்துகளும் மேற்கூறிய இடங்களிலிருந்தும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது மற்றும் பெங்களூர் திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 200 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாதாவரத்திலிருந்து 23/01/2026 மற்றும் 24/01/2026 ஆகிய நாட்களில் 24 பேருந்துகளும் சிறப்பு பேருந்துகள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், 26/01/2026 திங்கள் அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னைக்கு 800 சிறப்பு பேருந்துகள் பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது மற்றும் பல்வேறு இடங்களிலிருந்து திருப்பூர், பெங்களூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடக்ளுக்கு 250 சிறப்பு பேருந்துகள் 26/01/2026 அன்று இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த வார இறுதியில் வெள்ளிக்கிழமை அன்று 20,254 பயணிகளும் சனிக்கிழமை 12,811 பயணிகளும் ஞாயிறு அன்று 8,566 பயணிகளும் மற்றும் திங்கட்கிழமை 19,353 பயணிகளும் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு www.tnstc.in மற்றும் Mobile App மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இச்சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, பயணிகள் மேற்கூறிய வசதியினை பயன்படுத்தி தங்களது பயணத்தினை மேற்கொள்ள இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் குடியரசு தினத்தை முன்னிட்டு ஏற்படும் கூடுதல் பயணிகள் கூட்டத்தைக் கையாள, சென்னை எழும்பூர் கன்னியாகுமரி இடையே சிறப்பு ரெயில்கள் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது. இதன்படி சென்னை எழும்பூரில் இருந்து கன்னியாகுமரிக்கு செல்லும் சிறப்பு ரெயில் (வண்டி எண்: 06135) 23ம் தேதி (இன்று) இரவு 11.45 மணிக்கு எழும்பூர் ரெயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டு, நாளை மதியம் 1 மணிக்கு கன்னியாகுமரி சென்றடையும்.

மறுமார்க்கத்தில், கன்னியாகுமரியில் இருந்து சென்னை கடற்கரைக்கு செல்லும் சிறப்பு ரெயில் (வண்டி எண்: 06136) வருகிற 26ம் தேதி கன்னியாகுமரியில் இருந்து இரவு 9.35 மணிக்கு புறப்பட்டு, அடுத்த நாள்காலை 10.15 மணிக்கு சென்னை கடற்கரை வந்து சேரும்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

24.01.2026

# தூத்துக்குடியில் பொதுமக்களுக்கு விசில், இனிப்பு வழங்கிய தவெக நிர்வாகி அஜிதா ஆக்னல்



தூத்துக்குடி, ஜன.24

தமிழ்நாடு சட்டசபைக்கு இன்னும் சில மாதங்களில் பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு இந்திய தேர்தல் கமிஷன் தேர்தல் ஆயத்த பணிகளில் இறங்கியுள்ளது. அரசியல் கட்சிகளும் தேர்தல் பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றன.

இந்த சட்டசபை தேர்தலில் முதல் முறையாக போட்டியிட உள்ள விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் (த.வெ.க.) சார்பில், சின்னம் ஒதுக்கீடு செய்யக்கோரி இந்திய தேர்தல் கமிஷனில் வேண்டுகோள் வைக்கப்பட்டிருந்தது. அதன்படி 2026ம் ஆண்டு சட்டசபை பொதுத்தேர்தலுக்கு விஜய்யின் தமிழக வெற்றிக்கழகம் கட்சி 'விசில்' சின்னத்தை பொது சின்னமாக வழங்க கோரிக்கை விடுத்தது.

இதனை பரிசீலித்த இந்திய தேர்தல் கமிஷன், சலுகை அடிப்படையில் அந்த சின்னத்தை தமிழ்நாடு முழுவதும் அந்த கட்சிக்கு அனுமதித்து கடிதம் அனுப்பி இருக்கிறது. அந்தவகையில், த.வெ.க.வுக்கு விசில் சின்னம் ஒதுக்கப்படுவதாக தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது. தமிழகத்தின் 234 சட்டசபை தொகுதிக்கும் ஒரே பொது சின்னமாக விசில் சின்னத்தை தேர்தல் கமிஷன் த.வெ.க.வுக்கு ஒதுக்கியுள்ளது.

தவெகவுக்கு விசில் சின்னம் ஒதுக்கப்பட்டதை தொடர்ந்து கட்சி நிர்வாகிகள் உற்சாகம் அடைந்துள்ளனர். மேலும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தவெக நிர்வாகிகள் பொதுமக்களுக்கு விசில் வழங்கி கொண்டாடத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், தவெகவுக்கு விசில் சின்னம் வழங்கப்பட்ட நிலையில், தூத்துக்குடியில் பொதுமக்களுக்கு வழங்கியதவெகநிர்வாகி அஜிதா ஆக்னல் விசில், இனிப்பு வழங்கினார். அதனை தொடர்ந்து நிர்வாகிகளுடன் சேர்ந்து அஜிதா ஆக்னல் விசில் அடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

சமீபத்தில் கட்சிப் பதவி விவகாரத்தில் விஜயின் காரை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டு, கட்சித் தலைமை கண்டுகொள்ளாததால் மன அழுத்தத்தில் அதிகளவில் மாத்திரைகள் உட்கொண்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றது குறிப்பிடத்தக்கது.

# 5 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை: வாலிபருக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை

ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் பெட்டபஞ்சானி பகுதியை சேர்ந்த மகபூப்ஷெரீப் மகன் காலேஷா (23 வயது). இவர் வேலூர் மாவட்டம் குடியாத்தம் கிருஷ்ணா நகர் பகுதியில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்து கடைகளுக்கு சாம்பிராணி போடும் வேலை செய்து வந்தார். கடந்த 2023ம் ஆண்டு நவம்பர் மாதம் காலேஷா ஒரு கடையில் சாம்பிராணி புகை போடுவதற்காக சென்றார். அந்த கடையின் உரிமையாளர் மற்றும் அங்கிருந்த வாடிக்கையாளர் பெண் ஆகியோர் அந்த புகை பிடிக்காது என்று வெளியே சென்றனர்.

கடையின் உள்ளே அந்த பெண்ணின் 5 வயது மகள் செல்போன் பார்த்து கொண்டிருந்தாள். காலேஷா கடை முழுவதும் சாம்பிராணி புகை போட்டு விட்டு அந்த சிறுமியை முத்தமிட்டு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். அதைக் கண்ட சிறுமியின் தாய் மற்றும் கடை உரிமையாளர் உடனடியாக அவரை மடக்கி பிடித்து சரமாரியாக தாக்கி போலீசில் ஒப்படைத்தனர். இதுகுறித்து குடியாத்தம் அனைத்து மகளிர் போலீசார் வழக்குப்பதிந்து காலேஷாவை கைது செய்து வேலூர் மத்திய சிறையில் அடைத்தனர். இந்த வழக்கின் விசாரணை வேலூர் சத்துவாச்சாரியில் உள்ள போக்சோ சிறப்பு கோர்ட்டில் நடைபெற்றது. அரசு தரப்பில் வக்கீல் இந்திரா மிசேல் ஆஜராகி வாதாடினார். இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதி ராதாகிருஷ்ணன் தீர்ப்பு வழங்கினார். அதில், சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த காலேஷாவிற்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.5 ஆயிரம் அபராதம் விதித்தார்.

மேலும் அபராதத் தொகையை செலுத்த தவறினால் கூடுதலாக 3 மாதங்கள் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். அதைத்தொடர்ந்து காலேஷாவை பலத்த காவலுடன் போலீசார் வேனில் ஏற்றி வேலூர் மத்திய சிறைக்கு அழைத்து சென்றனர்.

# கறிக்கோழி வளர்ப்புக் குறித்து ஆய்வு செய்ய மாவட்ட அளவில் தொழில்நுட்பக் குழு அமைப்பு



சென்னை, ஜன.24

கறிக்கோழி வளர்ப்புக் குறித்து ஆய்வு செய்ய மாவட்ட அளவில் தொழில்நுட்பக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"தமிழ்நாட்டில் வருடத்திற்கு சுமார் 5055 கோடி கறிக்கோழி வகைக்கோழிகள் வளர்க்கப்பட்டு விற்கப்படுகின்றன. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏறத்தாழ 20,000 கறிக்கோழிப் பண்ணை உரிமையாளர்கள் உள்ளனர். மேலும், ஏறத்தாழ 66 ஒருங்கிணைப்பாளர்கள் (integrators) இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

கறிக்கோழி உற்பத்திச் செலவு உள்ளிட்ட, சிரமங்கள் குறித்து கறிக்கோழி பண்ணை உரிமையாளர்கள் பல்வேறு கோரிக்கைகள்வழங்கியதன்அடிப்படையில், 29.12.2025 மற்றும் 21.1.2026 ஆகிய தேதிகளில் கால்நடை பராமரிப்பு இயக்குநர் அவர்கள் நடத்திய கூட்டத்தில் சங்க நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

கறிக்கோழி ஒருங்கிணைப்பாளர்கள் (Integrators) (ம) கறிக்கோழி வளர்ப்புப் பண்ணை உரிமையாளர்களிடையே வர்த்தக ரீதியிலான ஒப்பந்தம் செய்துகொண்டு செயல்படுகின்றனர். இவர்களுக்கிடையே உள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒப்பந்த விதிகளுக்குட்பட்டே தீர்வு காண முடியும் என சங்க நிர்வாகிகளிடம் தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும், கறிக்கோழி வளர்ப்புப் பண்ணை உரிமையாளர்களின் கோரிக்கை குறித்து ஆய்வு செய்து தீர்வு காணும் வகையில் பேராசிரியர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, உதவி இயக்குநர், கால்நடை நோய் நுண்ணறிவுப் பிரிவு, வேளாண்மை துறைஅலுவலர்உள்ளிட்ட மாவட்ட அளவிலானதொழில்நுட்ப குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு கோழிப் பண்ணை உரிமையாளர்கள் மற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுடன் ஆலோசித்து உள்ளீடுகள், தரம் மற்றும் செலவு, உற்பத்திப் பெருக்கத்திற்கான வழிவகைகள், வளர்ப்புப் பணிகள் மற்றும் பண்ணைச் செயல்பாடுகளில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், நோய்ப் பரவல் மற்றும் மருத்துவ சிகிச்சையிலிருக்கும் இடைவெளி, உற்பத்தி மற்றும் கொள்முதல் ஆகியவற்றிற்கிடையேயான பிரச்சினை தொடர்பான விவரங்களை ஆய்வு செய்து கறிக்கோழி வளர்ப்புத் தொழில் நடைபெறும் மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட கலெக்டரிடம் கலந்தாலோசித்து உரிய தீர்வு காண அறிவுறுத்தப்பட்டுள்ளது என கால்நடை பராமரிப்புத் துறை தெரிவித்துள்ளது."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (24.01.2026)

**மேஷம்:** இன்று பொறுமை தேவைப்படும் நாள். பேச்சில் நிதானம் இருந்தால் குடும்பத்தில் குழப்பங்களைத் தவிர்க்கலாம். வாகனப் பயணங்களில் எச்சரிக்கை அவசியம்.

**ரிஷபம்:** தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். கணவன்மனைவி இடையே ஒற்றுமை பலப்படும்.

**மிதுனம்:** நினைத்த காரியங்கள் தடையின்றி முடியும். பணியிடத்தில் உங்கள் திறமைக்குஅங்கீகாரம்கிடைக்கும். நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும்.

**கடகம்:** அலைச்சல்கள் அதிகமாக இருந்தாலும், மாலை நேரத்தில் மனநிம்மதி கிடைக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்படலாம், சிக்கனம் தேவை.

**சிம்மம்:** உறவினர்களிடையே மதிப்பு உயரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு அமையும். புதிய முயற்சிகள் வெற்றியைத் தரும்..

**கன்னி:** அலுவலகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். கடன் சுமைகள் குறையத் தொடங்கும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

**துலாம்:** உற்சாகமான நாள். திட்டமிட்ட காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். பிள்ளைகளால் பெருமை சேரும்.

**விருச்சிகம்:** மனதில் சிறு குழப்பங்கள் வந்து செல்லும். யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போட வேண்டாம். அமைதியாகஇருந்தால்நன்மைகள் தேடி வரும்.

**தனுசு:** துணிச்சலான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். சகோதர வழியில் அனுகூலம் உண்டாகும். வெளியூர் பயணங்கள் நன்மையளிக்கும்.

**மகரம்:** பேச்சால் காரியங்களைச் சாதிப்பீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும்.

**கும்பம்:** தடைபட்ட காரியங்கள் இன்று கைகூடும். செல்வாக்கு உயரும் நாள். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த தகவல் வந்து சேரும்.

**மீனம்:** வேலைப்பளு அதிகமாகத் தோன்றும். எதிலும் ஒருமுறைக்கு இருமுறை சிந்தித்துச் செயல்படுவது நல்லது. தியானம் மன அமைதி தரும்.

# 16 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை: போக்சோவில் 3 பேர் கைது

தஞ்சை, ஜன.24

தஞ்சை மாவட்டத்தை சேர்ந்த 16 வயது சிறுமியை ஆசை வார்த்தை கூறி மறைவான இடத்திற்கு அழைத்துச் சென்று அவருக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஒரத்தநாடு அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. அதன் பேரில் போக்சோ சட்டத்தின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்து ஒரு வாலிபரை கைது செய்து விசாரணை நடத்தினர். இந்த விசாரணையில், சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த சம்பவத்தில் மேலும் சிலருக்கும் தொடர்பு இருப்பது தெரியவந்தது. இதனை தொடர்ந்து சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த சம்பவத்தில் தொடர்புடைய ஒரத்தநாடு பகுதியைச் சேர்ந்த ரமணா (வயது 24), தமிழ்ச்செல்வன் (26), லட்சுமணன் (19) ஆகிய 3 பேரையும் போக்சோ சட்டத்தில் ஒரத்தநாடு அனைத்து மகளிர் போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சென்னையில் வளர்ப்பு நாய் கடித்து சிறுவன் படுகாயம்

சென்னை தலைமைச் செயலக காலனி பகுதியை சேர்ந்த டேனியல் என்பவர் தனது வளர்ப்பு நாயை நடைபயிற்சிக்கு அழைத்து சென்றார். அப்போது அதே பகுதியை சேர்ந்த அர்ஜூன் என்ற 10 வயது சிறுவன் அங்குள்ள பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்தார்.

இந்நிலையில், டேனியலின் வளர்ப்பு நாய் சிறுவன் அர்ஜூன் மீது பாய்ந்து அவரை கடித்துள்ளது. இதில் படுகாயமடைந்த சிறுவன் உடனடியாக சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பாக சிறுவனின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# "மங்காத்தா" ரீரிலீஸை கொண்டாடும் ரசிகர்கள் இயக்குநர் வெங்கட் பிரபு நெகிழ்ச்சி





இயக்குநர்வெங்கட் பிரபு இயக்கத்தில் அஜித் நடித்து 2011ம் ஆண்டுவெளிவந்தபடம் 'மங்காத்தா'. அஜித்துடன்இணைந்து அர்ஜுன் முதல் முறையாக இப்படத்தில் நடித்திருந்தார். யுவன் சங்கர் ராஜா இசையமைத்த இப்படத்தில் திரிஷா, பிரேம்ஜி, ராய் லட்சுமி, அஞ்சலி, வைபவ், ஆண்ட்ரியா, மகத் என பலர் நடித்திருந்தனர். மிகப்பெரிய வெற்றிப்படமாக 'மங்காத்தா' அமைந்து இருந்தது.


இப்படத்தில் நடிகர் அஜித் நெகட்டிவ் ரோலில் நடித்திருந்தார் . திரை வாழ்க்கையில் சிறிய பின்னடைவைச் சந்தித்த நடிகர் அஜித்துக்கு 'மங்காத்தா' படம் பெரும் 'கம்பேக்'காக அமைந்தது. கதாநாயகனாக அஜித்தை கொண்டாடிய ரசிகர்கள் எல்லாம் வில்லனாக கொண்டாட வைத்த படம் 'மங்காத்தா'.

15 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று 'மங்காத்தா' படம் ரீ ரிலீஸ் செய்யப்பட்டு உள்ளது. 'மங்காத்தா' படத்தின் ரீ ரிலீஸை ரசிகர்கள் உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர். தியேட்டர்களில் படத்தை பார்க்க குவிந்த ரசிகர்கள் பட்டாசு வெடித்தும், மேள தாளங்களுடன் கொண்டாடி வருகின்றனர்.

இயக்குநர் வெங்கட் பிரபு, பிரேம்ஜி, மகத், வைபவ் மற்றும் இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் ரசிகர்களுடன் இணைந்து திரையரங்கில் 'மங்காத்தா' படத்தை பார்த்தனர்.

இந்நிலையில், 'மங்காத்தா' படம் ரீரிலீஸான நிலையில் இயக்குநர் வெங்கட்பிரபு தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அதில் "இது ஒரு ரீரிலீஸ் போல் இல்லை. அதே 2011 வைப் . மங்காத்தாவிற்கும், அஜித்துக்கும் நீங்கள் பொழியும் அன்பிற்கு நன்றி. 60% பேர் இப்படத்தை முதல்முறையாக திரையரங்கில் பார்க்கின்றனர். அனைவரும் சென்று என்ஜாய் பண்ணுங்க" என்று கூறியுள்ளார்.

# 'தும்பட்' இயக்குனரின் அடுத்த படைப்பு...'மாயசபா' டிரெய்லர் வெளியீடு




'தும்பட்' என்ற ஒரு கல்ட் கிளாசிக் படத்தை வழங்கிய இயக்குனர் ரஹி அனில், இப்போது புதிய படைப்பை ரசிகர்களுக்கு கொண்டு வந்துள்ளார். அவர் தற்போது இயக்கி உள்ள படம் 'மாயசபா தி ஹால் ஆப் இல்லுஷன்'. இந்த படத்தின் டீசர் சமீபத்தில் வெளியானநிலையில், தற்போது டிரெய்லர் வெளியாகி இருக்கிறது. 'தும்பட்' படத்தைப் போலவே இந்த படத்திலும் ஒரு வித்தியாசமான உலகம் வெளிப்படும் என்று தெரிகிறது. குறிப்பாக இதில் முக்கிய வேடத்தில் நடிக்கும் ஜாவேத் ஜாபேரி, இதுவரைகண்டிராத ஒரு புதிய அவதாரத்தில் தோன்றி அனைவரையும் ஆச்சரியப்படுத்த உள்ளார். மேலும், வீணா ஜம்கர், தீபக் டாம்லே, முகமது சமத் மற்றும் பலர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். இந்த படம் வருகிற 30ம் தேதி திரைக்கு வர உள்ளது.

# காதலர் தினத்தில் ரீ ரிலீஸ் ஆகும் சாய்பல்லவி படம் ரசிகர்கள் உற்சாகம்

சேகர் கம்முல்லா இயக்கத்தில் கடந்த 2021ல் வெளியான படம் 'லவ் ஸ்டோரி'. நாக சைதன்யா சாய் பல்லவி நடிப்பில் உருவான இந்த படம் தெலுங்கில் பிளாக்பஸ்டர் ஹிட் ஆனது. ரேவந்த் என்ற பாத்திரத்தில் நாக சைதன்யாவும், மவுனிகா என்ற பாத்திரத்தில் சாய் பல்லவியும் நடித்திருந்தனர். முழு நீள காதல் படமாக இந்த படம் அமைந்திருந்தது.

இந்த படத்தில் சாய் பல்லவியின் நடிப்பு பெரிதும் பேசப்பட்டது. சமூகக் கட்டுப்பாடுகள் மற்றும் தடைகளைத் தாண்டி இருவரும் காதலிப்பதாக இந்த படத்தின் திரைக்கதை அமைந்திருந்தது. இத்திரைப்படத்தில் சாய் பல்லவியின் நடனம் மற்றும் நடிப்பிற்கு பெரும் பாராட்டுகள் கிடைத்தன.

சாய் பல்லவியின் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்ற இந்த படம் 5 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ரீ ரிலீஸ் செய்யப்பட உள்ளது. காதலர் தினமான வரும் பிப்ரவரி 14ஆம் தேதி இந்த படம் ரீ ரிலீஸ் செய்யப்பட உள்ளது. இதனால் சாய் பல்லவி ரசிகர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர். தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மொழிப் படங்களில் முன்னணி நடிகையாக உள்ள சாய் பல்லவி தற்போது அமீர் கான் தயாரிப்பில் உருவாகும் ஏக் தின் படத்தில் நடித்துவருகிறார். இந்த படம் மே மாதம் திரைக்கு வர உள்ளது. கதாநாயகனாக ஜூனைத் கான் நடித்துள்ளார்.

# யு19 உலகக் கோப்பை: இங்கிலாந்து , பாகிஸ்தான் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்




16 அணிகள் பங்கேற்கும் 19 வயதுக்குட்பட்டவருக்கான (யு19) ஆண்கள் கிரிக்கெட் உலகக் கோப்பை ஜிம்பாப்வே மற்றும் நமீபியாவில் நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் 4 பிரிவில் இருந்தும் முதல் 3 இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர் சிக்ஸ் சுற்றுக்கு முன்னேறும். இந்த சுற்றில் விளையாடும் 6 அணிகளும் 2 பிரிவாக பிரிக்கப்படும். இதன் முடிவில் 2 பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும்.

இந்த நிலையில், ஹராரேயில் நேற்று நடந்த ஒரு ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி (சி பிரிவு) 8 விக்கெட் வித்தியாசத்தில் ஜிம்பாப்வேயை வீழ்த்தி 2வது வெற்றியை பெற்றது. அந்த பிரிவில் இங்கிலாந்து (3 வெற்றி), பாகிஸ்தான் (2 வெற்றி, ஒரு தோல்வி), ஜிம்பாப்வே (2 தோல்வி, ஒரு முடிவில்லை) முறையே டாப்3 இடங்களை பிடித்து அடுத்த சுற்றுக்கு (சூப்பர்6) தகுதி பெற்றன.

# டி20 உலகக் கோப்பை நியூசிலாந்து அணியில் இருந்து ஆடம் மில்னே விலகல்...மாற்று வீரர் இவரா?

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் 2026ஆம் ஆண்டிற்கான ஐசிசியின் பத்தாவது டி20 உலக கோப்பை கிரிக்கெட் தொடரானது நடைபெற உள்ளது. பிப்ரவரி 7ம் தேதி துவங்கும் இந்த தொடரானது மார்ச் 8ஆம் தேதி வரை நடைபெற இருக்கிறது. மொத்தம் 20 அணிகள் பங்கேற்று விளையாட இருக்கிறது.

இதில் நியூசிலாந்து அணி, 'டி' பிரிவில் ஆப்கானிஸ்தான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், தென் ஆப்ரிக்கா, கனடா அணிகளுடன் இடம் பெற்றுள்ளது. முன்னதாக இத்தொடருக்கான 15 பேர் கொண்ட நியூசிலாந்து அணி அறிவித்தது. அதன்படி, மிட்செல் சான்ட்னர் (கேப்டன்), ஆலன், பிரேஸ்வெல், மார்க் சாப்மன், கான்வே, ஜேக்கப் டபி, பெர்குசன், மாட் ஹென்றி, டேரில் மிட்செல், ஆடம் மில்னே, ஜேம்ஸ் நீஷம், பிலிப்ஸ், ரச்சின் ரவிந்திரா, டிம் செய்பெர்ட், இஷ் சோதி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இந்நிலையில், டி20 உலக கோப்பைக்கானநியூசிலாந்து அணியில் இடம்பெற்றிருந்த ஆடம் மில்னேதொடைப் பகுதியில் ஏற்பட்ட காயத்தால் விலகி இருக்கிறார். அவருக்கு மாற்றாக கைல் ஜெமிஷன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# டி20 உலக கோப்பைக்கான தென் ஆப்பிரிக்க அணியில் மாற்றம்




டி20 உலகக்கோப்பை தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் வருகிற பிப்ரவரி 7ம் தேதி தொடங்க உள்ளது. இந்த தொடரில் பங்கேற்கும் வீரர்கள் பட்டியலை அனைத்து நாடுகளும் அறிவித்துவிட்டன. சில வீரர்கள், காயம் காரணமாக தொடரில் இருந்து விலகும் சூழல் ஏற்பட்டால், மாற்று வீரர்களை அணிகள் அறிவித்து வருகின்றன.

இந்த நிலையில், தென் ஆப்பிரிக்காவை சேர்ந்த டோனி டி சோர்சி மற்றும் டொனோவன் பெரீரா ஆகியோருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. இதனால், உலகக் கோப்பை டி20 தொடருக்கான அணியில் இருந்து இருவரும் நீக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மாற்று வீரர்களாக விக்கெட் கீப்பர்பேட்ஸ்மேன் ரியான் ரிகெல்டன் மற்றும் நடுவரிசை அதிரடி பேட்ஸ்மேன் டிரிஸ்டன் ஸ்டப்ஸ் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளதாக தென் ஆப்பிரிக்ககிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

அணியின் மூத்த நட்சத்திர வீரரான டேவிட் மில்லருக்கும் காயம் ஏற்பட்டுள்ளது. எனினும் அவர் டி20 உலகக்கோப்பைக்கான 15 பேர் அடங்கிய பட்டியலில் இருந்து நீக்கப்படவில்லை. அவரின் காயத்தை பொறுத்து, அவர் அணியில் இருப்பாரா என்பது குறித்து தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் வாரியம் முடிவெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V. CELL: 9443699066